**16.10.2025**

**MCOP.No.118/2024**
**ம.சா.1 : செல்வி**
**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) விபத்து சமயத்தில் எனது கணவர் பயணம் செய்த இரு சக்கர வாகனத்தை ஓட்டி சென்றவர் மணிகண்டன். அவரை எனக்கு ஏற்கனவே தெரியும். மணிகண்டனும் எனது கணவரும் ஒரே மில்லில் தான் வேலை செய்கிறார்கள். விபத்து நடந்த இடத்தை நான் நேரில் சென்ற பார்த்தேன். சம்பவ இடத்தில் இருந்து வலது புறத்தில் தான் அந்த மில் உள்ளது. மணிகண்டனும் எனது கணவருக்கும் அன்று இரவு பணி. மேற்படி இருவருக்கும் வேலைக்கு செல்லும்போது வலது பக்கம் மில்லுக்கு ரோட்டில் இருந்து திரும்பும் போது பின்னால் வந்த இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. நான் கேள்வி பட்ட வாறு தான் விபத்து ஏற்பட்டது.

2) மணிகண்டன் என்பவருக்கு லேசான காயம் தான் ஏற்பட்டது. மணிகண்டனுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் விளக்கு வெளிச்சம் இருந்தது. மணிகண்டன் தான் அஜாக்கிரதையாக திடீரென்று தனது வாகனத்தை வலது பக்கம் திருப்பியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி எனது கணவர் பயணம் செய்த இரு சக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டாளரை இவ்வழக்கில் தரப்பனராக சேர்க்க வேண்டும் என்று 2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த பதிலுரை சொல்லி உள்ள விவரம் எனக்கு தெரியாது. காப்பீட்டு நிறுவனம் விசாரித்த வரை மணிகண்டன் விபத்திற்கு ஒரு காரணம் என்பதால் முழுமையான நஷ்ட ஈட்டை பெறுவதற்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

3) எனது கணவர் வேலை செய்த மில்லில் இருந்து யாரையும் விசாரிக்க உள்ளேனா என்றால் இல்லை. எனது கணவருக்கு கூலி தினமும் கையில் கொடுத்துவிடுவார்கள். என்னென்னைக்கு வேலைக்கு செல்கிறாரோ அன்னென்னைக்கு கூலி. மாதம் சுமார் 20 நாட்கள் வேலைக்கு செல்வார். எனக்கு ஒரு மகன் 3 பெண்கள் உள்ளனர்.

பெண்கள் அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. மகனுக்கு 32 வயதாகிறது. அவர் கொத்தனார் வேலைக்கு செல்கிறார். அவருக்கு ஒரு நாளைக்கு ரூ.600 கூலி. நான் களைவெட்ட செல்கிறேன். எனது கணவர் இறந்ததால் என் குடும்பத்தில எந்த ஒரு பணக்கஷ்டம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் மீது மோதிய இரு சக்கர வாகனத்தை ஓட்டியவர் தினேஷ் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தினேஷ் என்பவருக்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தினேஷ் என்பவருக்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் மேற்படி விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

4) எனது கணவர் தலையில் அடிபட்டு தான் இறந்துவிட்டார். எனது கணவர் தலைக்கவசம் அணியவில்லை என்பதாலும் மணிகண்டன் என்பவர் ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாலும் அவர் ஓட்ட தெரியாமல் ஓட்டி தீடிரென்று வலது பக்கம் திரும்பி விபத்தை ஏற்படுத்திவிட்டதாலும் விபத்தை ஏற்படுத்திய வாகனம் ஓட்டிய ஓட்டுநருக்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாலும் மேற்படி விபத்திற்கு இழப்பீடு கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் இழப்பீடு கோரியுள்ள தொகை மிக அதிகம் என்று சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S Date: 2025.10.16 17:37:27 +0530

**Accidents Claim Tribunal, Attur.**